**MCOP .No. 30/2020**

**Date :24.04.2023**

***ம.சா.1 சந்தன மாரி***

**3ம் எ.த.கு.வி**

எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான் . எனது கணவர் பக்கத்து வீட்டில் உள்ள ஒருவரிடம் தான் விபத்து சமயம் இருசக்கர வாகனத்தினை வாங்கி சென்றார். எனது கணவர் கொத்தனார் வேலை செய்ததற்கான உறுப்பினர் அட்டை உள்ளிட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் தினம் ரூ. 700/- வீதம் மாதம் ரூ. 21,000/- வருமானம் ஈட்டியதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் தெற்கில் இருந்து வடக்கில் திருநெல்வேலி- சங்கரன்கோவில் ரோட்டில் சென்று கொண்டிருந்த பொழுது தீடிரென திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் எவ்வித சைகையும் காட்டாமல் தீடிரென மேற்கில் இருந்து கிழக்காக திருப்பியதால் தான் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் சைகை காட்டி தான் திரும்பினார். கார் ஓட்டுநர் கவனமாகவும், நிதானமாகவும் வந்தார் என்றாலும், எனது கணவர் தீடிரென திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனவே கார் ஓட்டுநர் எவ்விதத்திலும் சம்பவ விபத்து பொறுப்பு கிடையாது என்றால் சரியல்ல. எனவே 3ம் எதிர்மனுதார் யாதொரு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் கிடையாது என்றால் சரியல்ல. எனது கணவரின் வயதை காட்டக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் பயணம் செய்த வாகனத்தின் உரிமையளார் மற்றும் காப்பீடு தாரர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை மற்றும் வட்டிவிகிதம் அதிகப்படியானது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதார் யாதொரு இழப்பீடும் செலுத்த கடமைப்பட்டவர் கிடையாது என்றால் சரியல்ல. எனவே 3ம் எதிர்மனுதாரைப்பொறுத்து மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**